News Release

UNITED NATIONS HUMAN RIGHTS
OFFICE OF THE HIGH COMMISSIONER

# பல தசாப்தங்களாக இடம்பெற்று வரும் வலிந்து காணாமலாக்கப்படல்களுக்கான பொறுப்புக்கூறலினை இலங்கை உறுதி செய்ய வேண்டும் - ஐநாவின் அறிக்கை

*ஜெனீவா (17 மே 2024) - பல தசாப்தங்களாக வலிந்து காணாமலாக்கப்படலுக்கு உட்படுத்தப்பட்ட பல்லாயிரக்கணக்கான மக்களின் கதி மற்றும் இருப்பிடம் தொடர்பான தகவல்களை கண்டறிந்து அதனை வெளியிடுவதற்கு இலங்கை அரசாங்கம் அர்த்தமுள்ள நடவடிக்கைகளை எடுக்க வேண்டுமெனவும் மற்றும் அதற்கு பொறுப்பான நபர்களை கணக்கிலெடுக்க வேண்டுமெனவும் ஐநா மனித உரிமைகள் அலுவலகத்தினால் இன்று வெளியிடப்பட்ட அறிக்கை கூறுகிறதது. காணாமலாக்குதலில் பாதுகாப்புப் படையினரும் அவர்களுடன் தொடர்புடைய ஆயுதக்குழுக்களும் ஈடுபட்டுள்ளனர் என்பதனை இலங்கை அரசாங்கம் ஏற்றுக் கொள்வதுடன் அதற்கான பொது மன்னிப்பினையும் அது கோர வேண்டுமென இவ்வறிக்கை அரசாங்கத்திற்கு அழைப்பு விடுத்துள்ளது.*

*வலிந்து காணாமலாக்கப்பட்ட அனைத்து இலங்கையர்களையும் ஒருபோதும் மறந்துவிட முடியாது என்பதனை இந்த அறிக்கை நினைவூட்டுவதாக ஐ.நா மனித உரிமைகள் ஆணையாளர் வோல்கர் டர்க் தெரிவித்தார். "அவர்களுடைய குடும்பங்களும் அவர்கள் சார்ந்து அக்கறை கொண்டவர்களும் நீண்ட காலமாக காத்திருக்கிறார்கள். உண்மையினை அறிய அவர்களுக்கு உரிமை உண்டு…"*

*"வலிந்து காணாமலாக்கப்படுதலுக்கு உட்பட்ட அனைவருக்காகவும் அந்த அரசாங்கம் அதனை வழங்கக் கடமைப்பட்டுள்ளது. அக் குற்றங்கள் முழுமையாக விசாரணை செய்யப்படவேண்டியமை மிகவும் அவசியமான விடையமாகும். அவை வலிந்து காணாமலாக்கப்பட்டவர்களின் அன்புக்குரியவர்களை மட்டுமன்றி, முழு சமூகங்களையும் மற்றும் ஒட்டுமொத்த இலங்கை சமுதாயத்தையுமே உலுக்கிக்கொண்டிருக்கின்றது."*

*வலிந்து காணாமலாக்கப்படுதலில் இருந்து அனைத்து நபர்களையும் பாதுகாப்பதற்கான சர்வதேச உடன்படிக்கையினை அங்கீகரித்தமை, காணாமல் போனோருக்கான அலுவலகம் மற்றும் இழப்பீடுகளுக்கான அலுவலகம் ஆகியவற்றை நிறுவியமை போன்ற சில சாதகமாகத் தோன்றும் அலுவலக நடவடிக்கைகளை அடுத்தடுத்து பதவியேற்ற அரசாங்கங்கள் மேற்கொண்ட போதிலும், தனிப்பட்ட வழக்குகளை விரிவான முறையில் தீர்ப்பதில் குறிப்பிடும்படியான உறுதியான முன்னேற்றம் அங்கு குறைவாகவே காணப்படுகிறது, என அந்த அறிக்கை காணுகிறது.*

*1970 கள் மற்றும் 2009 ஆம் ஆண்டுக்கு இடையில், பரவலாக இடம்பெற்ற வலிந்து காணாமலாக்கப்படுதல்கள், அடிப்படையில் இலங்கைப் பாதுகாப்புப்படையினராலும், அவர்களுடன் இணைந்த துணை இராணுவக் குழுக்களாலும் மேற்கொள்ளப்பட்டன. தமிழீழ விடுதலைப் புலிகளும் கடத்தல்களில் ஈடுபட்டுள்ளனர், அது "வலிந்து காணாமலாக்கப்படுதலுக்கு சமனானது" என ஐநாவின் வலிந்து மற்றும் தன்னிச்சையாகக் காணாமலாக்கப்படுவோருக்கான செயற்குழுவினால் வர்ணிக்கப்பட்டது.*

*தனி நபர்களுடனும் மற்றும் குழுக்களுடனுமான நேர்காணல்களிற்கு அமைய, நபர்கள் வலிந்து காணாமலாக்கப்படுவதால், அவர்களின் குடும்பங்கள் மீது, குறிப்பாகப் பெண்கள் மீது, நீடித்து வரும் உளவியல், சமூக மற்றும் பொருளாதார தாக்கங்கள் தொடர்பில் இந்த அறிக்கை விபரிக்கிறது. காணாமலாக்கப்பட்டவர்களில் பெரும்பான்மையானவர்கள் ஆண்களே, ஆதலால் அந்தக் குடும்பங்களில் பெண்களே வருமானம் ஈட்ட வேண்டிய ஒரே நபர்களாக உள்ளனர், அவ்வாறான நிலையில் அவர்கள் பணிக்கு செல்லும் சந்தர்ப்பங்களில், பாலியல் துன்புறுத்தல் மற்றும் சுரண்டல் போன்ற அபாயங்கள் உட்பட, பல்வேறு சிக்கல்களுக்கு உள்ளாகின்றனர். காணாமலாக்கப்பட்டோர்களை தேடுவதில் முன் நிற்கும் பல பெண்கள், இராணுவம் மற்றும் காவல்துறையினரின் பிடியில் துன்புறுத்தல், மிரட்டல், கண்காணிப்பு, தன்னிச்சையான*

*தடுப்புக்காவல், அடித்தல் மற்றும் சித்திரவதை உள்ளிட்ட மீறல்களுக்கு ஆளாகியுள்ளனர் என அது மேலும் தொடர்கிறது.*

*"நான் தேடுவதை தொடர்ந்தால், என் கணவரை துண்டு துண்டாக வெட்டுவார்கள் அல்லது என் குழந்தைகளைப் பின்தொடர்வார்கள் என்று அவர்கள் என்னிடம் சொன்னார்கள்" என தனது அன்புக்குரியவரை இன்னமும் தேடிக்கொண்டிருக்கும் ஒரு பெண்மணி கூறினார்.*

*"சர்வதேச சட்டத்தின் கீழ், காணாமலாக்கப்பட்டவர்களின் கதி மற்றும் இருப்பிடம் ஆகியவை தெளிவுபடுத்தப்படும் வரை, வலிந்து காணாமலாக்கப்பட்டோர் தொடர்பான வழக்குகளைத் தீர்ப்பது அரசின் தெளிவான கடமையாகும்," என உயர்ஸ்தானிகர் கூறியுள்ளார்.*

*இருப்பினும், பெரும்பாலான பாதிக்கப்பட்ட குடும்பங்கள் அத்தகைய தெளிவினை இன்னமும் பெறாமலே உள்ளனர். "இரண்டு வாரங்கள் கடந்து, இரண்டு மாதங்களானது, பின்னர் அது இரண்டு வருடங்களானது. இப்போது 32 வருடங்களாகிறது, நான் இன்னும் அவர்கள் பதிலுக்காக காத்துக்கொண்டிருக்கிறேன்" என காணாமலாக்கப்பட்ட தனது மகனுக்காக தேசிய விசாரணை ஆணைக்குழுவிடம் சாட்சியமளித்த ஒருவர் தெரிவித்தார்.*

*அடுக்கடுக்கான விசாரணை ஆணைக்குழுக்கள் அரசாங்கத்தினால் உருவாக்கப்பட்டன. இருப்பினும், அவற்றின் சில அறிக்கைகள் மாத்திரமே வெளியிடப்பட்டன, மேலும் அவ்வாறு வெளியிடப்பட்ட அறிக்கைகளையும் பெற்றுக் கொள்வது மட்டுப்படுத்தப்பட்டிருந்தது. பெரும்பாலான அவற்றின் பரிந்துரைகள், அதிலும் குறிப்பாக குற்றங்களுக்கான பொறுப்புக்கூறல் தொடர்பானவை, அமுல்படுத்தப்படவில்லை. தற்போதைய மூத்த அதிகாரிகள், முன்னாள் மூத்த அதிகாரிகள் மற்றும் இராஜதந்திரிகள் உட்பட குற்றஞ் சாட்டப்பட்டவர்கள் தொடர்ந்து நீதியின் பிடியிலிருந்து தப்பித்து வருகின்றனர்.*

*ஆயுத மோதல்கள் முடிவடைந்து ஏறக்குறைய 15 வருடங்கள் கடந்துள்ள நிலையில், ஆரம்ப கட்ட வலிந்து காணாமலாக்கப்படல் அலைகளை கடந்து பல தசாப்தங்களாகிவிட்ட போதிலும் கூட, இன்றுவரை இலங்கை அதிகாரிகள் அந்த மீறல்களுக்கான பொறுப்புக்கூறலை உறுதிப்படுத்த தவறி வருகின்றனர். "பொறுப்புக்கூறல் நிலை நாட்டப்படவேண்டும். நல்லிணக்கம் வெற்றியளிப்பதற்கான சந்தர்ப்பத்தினை ஏற்படுத்தவல்ல நிறுவன சீர்திருத்தங்களை நாம் காணவேண்டும்" என திரு டர்க் அவர்கள் தெரிவித்தார்.*

***முடிவு***